மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.34/2015

2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாலதி(Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.27.01.2025
பி.வா.சா.1
**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் மண்டபம் பேரூராட்சி அலுவலகத்தில் செயல்அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். எனது தரப்பில் 01.06.2016 தேதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை விபரம் தெரியும். அதன்பின்னிட்டு கூடுதல் எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிர்வழக்குரைக்கு விபரம் சொன்னது நான் தான் என்றால் சரிதான். அதில் உள்ள விபரம் எனக்கு நன்கு தெரியும். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் இடத்தில் நாங்கள் ரோடு போட்டதால் அதற்காக தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து அமைந்திருக்கும் இடம் மண்டபம் யாதவர் தெரு என்றால் சரிதான். இதற்கு முன்பு அதை இடையர் தெரு என்று சொல்வார்கள் என்றால் சரிதான். வாதி 2 இலக்க சொத்துக்கள் காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும். அதன் சர்வே எண் என்ன என்றால் தெரியும் ஞாபகம் இல்லை. மண்டபம் யாதவர் தெருவில் சர்வே எண்.240 இருந்தது என்றால் சரிதான். அதன்பின்பு 1 முதல் 11 உட்பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் படித்து பார்த்துள்ளேன். அதில்சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். வாதியின் முன்னவர் கடந்த 22.08.1972ம் தேதி சின்னக்குட்டி அம்மாள் என்பவர் கிரையம் வாங்கிய கிரையம் பத்திரம் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்பட்டது. அதில் காண்பிக்கக்கூடிய சொத்துவிபரத்தில் 2 இலக்க சொத்து காட்டப்பட்டு, கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நான்குமால்கள் செல்லமுத்து கோனார் வகையறா பயிர்தோட்டத்திற்கும் கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழமேலோடிய நெரிவு பாதைக்கு

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:12:40 +0530

வடக்கு என்றால் சரிதான். செல்லமுத்து கோனார் நிலத்துக்கும் தெற்கு என்றால் சரிதான். 2 வது இலக்க சொத்திற்கும் மேற்கு என்றால் சரிதான். இது 1 வது இலக்க சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 வது இலக்க சொத்திற்கு நான்குமால் மேற்படி கிராமத்தில் தில்லைமுத்து கோனார் நிலத்திற்கும், 1 வது இலக்கத்திற்கு கிழக்கு என்றால் சரிதான். தென்வடல் கிழமேலோடிய நெரிவு பாதைக்கும் வடக்கு என்றால் சரிதான். தில்லைமுத்து கோனார் வகையறா வீட்டிற்கு தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராமநாதபுரம் சமஸ்தான காலி இடத்திற்கும், கிணற்றிற்கும் மேற்கு என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை சின்னக்குட்டி அம்மாளின் வாரிசானா வேலாயி அம்மாள் மண்டபம் யாதவர் தெருவைச் சேர்ந்த கிருஷ்ணக்கோனாருககு ஒத்தி வைத்ததாகவும், அந்த ஒத்தி பத்திரம் வா.சா.ஆ.3 ஆக உள்ளது. அந்த ஒத்திபத்திரத்திலும் மேலே குறிப்பிட்டுள்ள நான்குமால் சொல்லி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேலாயி அம்மாள் மகள் லட்சுமி அம்மாள் வாதியின் தகப்பனார் 22.07.1968 தேதியில் கிரையம் எழுதிக்கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 30 வருடங்கள் பின்னிட்டு வாதியின் தகப்பானருக்கு சின்னக்குட்டிஅம்மாளின் வாரிசுகளால் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 1968 தேதியிட்ட கிரையம் பத்திரத்தில் மேலேசொன்ன 2 இலக்கங்கள் தான் கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் அரசு பணியில் உயர் பதவியில் பதவிவகித்து வருகிறேன் என்றால் சரிதான். அரசு துறை சம்பந்தமான விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி பத்திரங்கள் பதியப்பட்டது அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் பதிவு துறையால் என்றால் சரிதான். இந்த 1968 கிரையப் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள தாவா சொத்தான 2 வது இலக்க சொத்திற்கு நான்குமால் இதன் 1 வது இலக்க சொத்திற்கும் கிழக்கு, கிழமேல் நெரிவு பாதைக்கும் வடக்கு, செல்லப்பகோனார் வீட்டிற்கும்தெற்கு, கோவிந்தக் கோனார் வீடு கட்டியிருக்கும் நிலத்திற்கும், மாரியம்மன் கோவில் நிலத்திற்கும், கிணற்றிற்கும் மேற்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலே சொல்லியுள்ள வா.சா.ஆ.2, வா.சாஆ.3 கிரையப்பத்திரத்தில் மாரியம்மன் கோவிலோ, கிணறோ, அதற்கு கிழக்கே கோவிந்தக்கோனார் வீடோ சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் 1 வது இலக்க சொத்தில் நான்குமால்கள் விபரம் காளிமுத்து கோனார், சுப்பையா கோனார் வீட்டிற்கும் தென்வடல் முட்டுப்பாதையும் கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், கிழமேல் நெரிவு பாதைக்கும் வடக்கு

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:12:49 +0530

என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாகுக்கோனார், இருளப்பக்கோனார் நிலத்திற்கும் வீட்டிற்கும் தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது இலக்க சொத்திற்கும் மேற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அந்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அந்த விபரங்கள் தெரிந்து கொண்டு இல்லை என பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு கொடுக்கப்பட்ட 1ம் பிரதிவாதி தரப்பில் கொடுக்கப்பட்ட சான்றிட்ட கூடுதல் எதிர்வழக்குரையோடு தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கடந்த 02.04.1987ம் தேதி புலப்படம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த புலப்படம் வா.சா.ஆ.30 ஆகும். 1987 தேதியிட்ட புலப்படத்தில் மாரியம்மன் கோவில் என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான். தாவா புலத்தில் உள்ள சர்வே எண்.240 ஆனது 1 முதல் 11 உட்பிரிவு செய்யப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையிலோ, கூடுதல் எதிர்வழக்குரையிலோ மேற்படி சர்வே எண் எவ்வளவு விஸ்தீரணம் எவ்வளவு என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு சொல்ல தெரியாது. மண்டபம் பேரூராட்சி செயல் அலுவலவர் எனக்கு தெரிந்து தான் எதிாவழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனக்கு தெரிந்து தான் ஆவணங்களும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் போது சொத்தின் விஸ்தீரணம் தெரியாது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. பொதுவாக வருவாய் துறையால் எங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பாதைகளை தான் நாங்கள் பொதுப்பாதையாக பயன்படுத்த முடியும் என்றால் சரியல்ல. தாவா சொத்தான சர்வே எண்.240 பொதுப்பாதையாக பயன்படுத்த வருவாய் துறை ஏதேனும் ஆவணங்கள் கொடுத்துள்ளார்களா என்றால் வண்டிப்பாதையாக ஆவணம் கொடுத்துள்ளார்கள் ஒப்படைப்பு செய்யவில்லை. சர்வே எண்.240ல் 1 முதல் 11 உட்பிரிவுகளில் வருவாய் துறையால் வண்டிப்பாதையாக எங்களுக்கு ஒப்படைப்பு செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு ஒப்படைப்பு செய்யப்படாத இடத்தில் நாங்கள் எந்தவித ரோடோ, வேறு எந்த வசதிகளையும் செய்ய முடியாது என்றால் சரியல்ல. வருவாய் துறையால் ஒப்படைக்கப்படாத இடத்தில் நாங்கள் பொதுப்பாதையாக பயன்படுத்தலாம் என அரசாணை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. தனியாருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பாதை போடவேண்டும என்றால் அவர்கள

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.01.27 18:12:55 +0530

வருவாய் துறையிடம் இடத்தை ஒப்படைத்து வருவாய் துறை எங்களிடம் ஒப்படைத்தால் தான் பாதையாக பயன்படுத்த முடியும் என்றால் சரியல்ல. தனிநபருக்கு பாத்தியமான இடத்தில் நாங்கள் அத்துமீறி, ஆக்கிரமிப்பு செய்து ரோடு போட முடியாது என்றால் சரிதான். வழக்கில் கண்ட தாவா சொத்து, 1 வது இலக்க சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் எனக்கு தெரியாது. தனிநபருக்கு பாத்தியமான சொத்தை தான் பத்திரப்பதிவு துறையில் பதிவு செய்ய முடியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மண்டபம் பேரூராட்சி தீர்மானத்தின் படி மண்டபம் யாதவர் தெருவில் வாசுகிநாதன் வீட்டு சந்தில் பிவேவர் பிளாக் சாலை போடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்மான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன். தீர்மான நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில்தீர்மானம் போட்டிருந்தால் அந்த நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் வருவாய் துறையில் தகவல் அறியும் உரிமைசட்டப்படி கேட்கப்பட்டதில் சர்வே எண்.240 ல் உள்ள சொத்துக்களை மண்டபம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவில்லை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு வருவாய் துறையால் ஒப்படைப்பு செய்ய முடியாத இடத்தில் நாங்கள் தீர்மானம் போடமுடியாது, சாலையும் போட முடியாது என்றால் சரியல்ல வருவாய் துறை ஒப்படைக்கமாட்டார்கள் நாங்கள் தான் பார்த்து போடவேண்டும். அந்த தீர்மானத்தின் படிவாசுகிநாதன் சந்தில் தான் சாலை போடவேண்டும என்று தீர்மானம் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை தவிர வேறு எங்கும் ரோடு போட முடியாது என்றால் சரிதான். வாசுகிநாதன் சந்து 1 வது இலக்க சொத்திற்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். எங்கள் தீர்மானப்படி வாசுகிநாதன் சந்தை தவிர வாதிகள் சொத்தில் சாலை போடுவதற்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரையில் வாசுகிநாதன் வீடு சந்தில் எவ்வளவு தென்வடல், கிழமேல் எத்தனை அடியில் சாலை போடப்பட்டுள்ளது என்று சொல்லப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது தீர்மானத்தில் சொல்லவில்லை. பொதுவாக ஒரு தீர்மானம் போட்டு எத்தனை அடியில் ரோடு போடவேண்டும், எவ்வளவு மதிப்பு என்று சொல்லி தான் டெண்டர் விடுவார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் டெண்டரில் எத்தனை அடி என்று சொல்லி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மண்டபம் பேரூராட்சியில் எந்த தீர்மானமும் போடவில்லை என்றாலும்,

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:01 +0530

யாருக்கோ உதவி செய்யவேண்டும என்பதற்காக வாதிகளின் சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா 1 வது இலக்க சொத்திற்கு மேற்கேயும், தாவா 1,2 இலக்க சொத்திற்கும் மாரியம்மன்கோவில் தெற்கேயும் வண்டிப்பாதை செல்கிறது என்றால் சரிதான். தாவா 1, 2 இலக்க சொத்திற்கும், மாரியம்மன்கோவிலுக்கு தெற்கே உள்ள கிழமேல் வண்டிப்பாதையானது கிழக்கு நோக்கி சென்று மீண்டும் தெற்கு நோக்கி கௌரிமெஸ் வரை சென்று மண்டபம் செல்லும் தென்வடல் பாதையை சந்திக்கிறது என்றால் சரிதான். மேற்கே உள்ள பாதையும், தாவா 1, 2 இலக்க சொத்திற்கும், மாரியம்மன்கோவிலுக்கு தெற்கே உள்ள வண்டிபாதையும் 1922 கிரைய பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல் நாளது தேதி வரை வண்டிப்பாதை இருந்து வருகிறது என்றால் சரிதான். தாவா 2 வது இலக்க சொத்திற்கும், மாரியம்மன்கோவிலுக்கும் கிழக்கே காலி இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிழமேல் வண்டிப்பாதை கிழக்கு நோக்கி சென்று வடக்கே உள்ள நம்புபிச்சை வீடு வரை செல்கிறது என்றால் சரிதான். பொதுவாக அரசு புறம்போக்கு நீர்நிலபுறம்போக்கு பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்ட இடங்கள், பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். மேற்சொன்ன இடங்களை தவிர மற்ற இடங்களை அரசு துறையில் பதிவு செய்யப்படமுடியும் என்றால் சரிதான். தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் 1922 முதல் 2001 வரை பதிவு துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரங்கள் எல்லாம் தாவா 2 வது இலக்க சொத்திற்குதான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1, 2 இலக்க சொத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியும், வாதியின் உடன் பிறந்தவர்கள் தாவா 1, 2 இலக்க சொத்துக்களை 1922 லேயே இருந்து அனுபவம் செய்து வந்ததால்தான் அவர்களால் ஒத்தி, அடமானம், கிரையம் செய்து கொடுக்கமுடிந்தது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து இருப்பதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரை, நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்றது 14 1/2 செண்டு என ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த 14 1/2 செண்டில் 1 வது இலக்க சொத்து 5 1/2 செண்டாகவும், 2 வது இலக்க சொத்து 9 செண்டாகவும் சொல்லி, அந்த 5 1/2 செண்டை மண்டபத்தில் உள்ள ராஜவேல் என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.13 என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் தாவா 2 வது இலக்க சொத்தினை பொறுத்து வாதியோ, வாதியின் தகப்பனாரரோ அவர்களுக்குஉரிமை பாத்தியம்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:07 +0530

இருந்திருந்தால் உரிய அதிகாரியிடம் அனுமதி பெற்று பட்டா பெற்றிருக்கவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியோ, வாதியின் தகப்பனாரோ, அவரது முன்னோரோ போதிய கல்வியறிவு இல்லாத காரணத்தினால் தாங்கள் பெற்ற கிரைய பத்திரத்திற்கு பட்டா பெறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இருந்தபோதும் கடந்த 2013 ல் இருந்து வாதி அவரது உடன்பிறந்தவர்களுடன் சேர்ந்து பட்டா பெற வட்டாட்சியரிடம் மனு செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுவது பட்டா கேட்டு பருவதபர்த்தினி என்பவர் கொடுத்த மனு என்றால் சரிதான். 12.08.2015 தேதியிட்ட வாதியின் சகோதரி பருவதபர்த்தினி இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு பட்டா கோரி விண்ணப்பித்த மனுதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். சர்வே செய்வதற்கு சர்வே துறையினருக்கு கொடுத்த சலான் என்றால் சரிதான். வாதியின் சகோதரி பருவதபர்த்தினி என்பவர் 22.08.2018 ம் வருடம் இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு பட்டா கோரி விண்ணபித்த மனுதான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சலான் சர்வே எண்.240/1, 240/8 ஆகியவற்றிற்கு சர்வே துறையினருக்கு சொத்தினை அளவீடு செய்து பட்டா கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.16, 18, 19 ஆகியவைகள் என்றால் சரிதான். புறம்போக்கு நிலத்தை பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். தாவா சொத்து அல்லது எந்த சொத்தாக இருந்தாலும் பதிவு செய்யவேண்டும்என்றால் அந்த சொத்தின் guildeline மதிப்பு பார்த்துதான் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். புறம்போக்கு நிலத்திற்கு சொத்தின் வழிகாட்டு மதிப்பு இருக்காது என்றால் சரிதான். அது Zero ல்தான் இருக்கும். தாவா 1, 2 சொத்துக்களை பொறுத்து வாதியோ, அவரது முன்னோர்களோ அது அவர்களுக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அரசு துறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் பொதுமக்களின் நலன்கருதி வாசுகிநாதன் சந்தில் பேவர்பிளாக் போட தீர்மானம் போடப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரையில் பொதுமக்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் தான் தீர்மானம் போட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு எதிர்வழக்குரையிலும் முரண்பட்ட கருத்துக்களை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் நத்தம் புறம்போக்கு நிலம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரையில் வண்டிப்பாதை என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையில்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:13 +0530

சொல்லப்பட்ட சாலை அமைப்பதற்கான தீர்மானத்தில் வாசுகிநாதன் சந்தை தவிர வேறு எந்த பகுதியிலும் போடக்கூடாது என சொல்லவில்லை என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரை, நிருபண வாக்குமூலம் ஆகியவற்றில் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற நிலம் புலஎண்.240ல் அடங்கி வருகிறது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரையில் வழக்குரை 2 முதல் 9 பாராக்கள் மறுத்து சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையிலேயே வாதிகள் கிரையம் பெற்றத்தை ஒப்புகொண்டுள்ளேன் என்றால் சரிதான். மண்டபம் யாதவர் தெருவில் உள்ள சர்வே எண்.240 ஆனது 1 முதல் 11 வரை உட்பிரிவு செய்யப்பட்டது 1990, 1991ல் நத்தம் நிலவரிதிட்டத்தில் என்றால் எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட்டிற்கு பின்புதான் நிலங்களுக்கு சர்வே எண் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். அதற்கு முன்பு பைமாஸ் எண் தான் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வாதியின் முன்னோர்கள் கிரையம் பெற்ற பத்திரங்களில் சர்வே எண் குறிபிடவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரங்களில் நான்குமால்கள் குறிபிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். செட்டில்மெண்டிற்கு முன்பு பத்திரங்கள் பதிவு செய்யும்போது நான்குமால்கள் சொல்லிதான் பதிவு செய்யப்படும் என்றால் எனக்கு தெரியாது. அந்த அடிப்படையில்தான் வாதியின் முன்னோர்கள் பெற்ற கிரைய பத்திரங்களில் சர்வே எண் சொல்லாமல் நான்குமால் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.18 ஆவணமானது தாவா சொத்துக்களின் வில்லங்கசான்று என்றால் சரிதான். அரசு புறம்போக்கு இடம் என்றால் வில்லங்கசான்று வராது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வாதி யாதவர் தெருவில் குடியிருந்து வந்து அவருக்கு இன்சூரண்ஸ் பெறப்பட்ட சான்று வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியின் சகோதரர் கருப்பையா மண்டபம் யாதவர் தெருவில் குடியிருந்து வந்ததற்கான மண்டபம் மீன்வளத்துறையில் கொடுக்கப்பட்ட ஆவணம்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம்பிரதிவாதி ராஜேஷ்வரன் என்பவர் ஒப்பந்தாரர் என்றால் இல்லை. இவர் இல்லை மற்றவர்தான் ஒப்பந்தாரர் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளோம். நிருபண வாக்குமூலம் நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு விபரங்கள் சொன்னது நான்தான். அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்கள் விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். ராஜேஷ்வரன்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:19 +0530

ஒப்பந்ததாரர் இல்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் சகோதரர் காளீஸ்வரி என்பவர் 02.07.2015 ம் தேதி இராமேஸ்வரம் துணை கண்காணிப்பாளருக்கு நான் அனுமதி கொடுத்ததாக சொல்லி வாதியின் சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து இந்த வழக்கின் 2 ம்பிரதிவாதி சாலை போட முயன்றதை இந்த வாதி தடுத்தும், அவர் சாலை போடுவதை நிறுத்தாதால் அவர் கொடுத்த புகார் மனு வா.சா.ஆ.17 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனால் 2 ம்பிரதிவாதி ஒப்பந்ததாரர் என்பதால் சாலை போட முயன்றுள்ளார் என்றால் சரியல்ல. நீதிமன்றம் மூலம் வாதிகள் தரப்பில் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் தாவா சொத்தை பார்வையிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்ற ஆணையர் இடைக்கால அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரமும் எனக்கு தெரியும். அதில் சொல்லப்பட்டுள்ள சில விபரங்களுக்கு வாதிதரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது தரப்பு வழக்கறிஞரிடம் இந்த ஆட்சேபனை மனு கொடுக்கப்பட்டுள்து என்றால் எனக்கு தெரியாது. ஆணையர் இடைக்கால அறிக்கையில் வாதி தரப்பில் கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தின் நான்குமாலில் சொத்தினை அளவீடு செய்தபோது கிரைய பத்திரத்தில் கண்ட சொத்து மண்டபம் குரூப் சர்வே எண்.240/2 என வருவாய் ஆவணங்களின்படி தெரியவருகிறது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மண்டபம் யாதவர் தெருவில் மாரியம்மன்கோவில் மேற்கு பகுதியில் தான் சர்வே எண்.240/2 அமைந்துள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறுதி அறிக்கையில் மேற்சொன்ன விபரங்கள் கண்டு பத்தி 3 ல் உள்ள விபரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியால் தாக்கல் செய்யப்பட்ட 1968 கிரைய பத்திரத்தில் தாவா 2 வது இலக்க சொத்திற்கு கிழக்கு பகுதியில் மாரியம்மன்கோவில் உள்ளது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆணையரின் அறிக்கையில் மேற்கு பேவர்பிளாக் சாலையும், கிழக்கு பக்கத்தில் சிமிண்ட் ரோடு உள்ளது என தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்தில் இருந்து வந்ததற்கு அவர்கள் பெயரில் வரி ரசீதுகள் 10 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.23 என்றால் சரிதான். வா.சா.ஆ.26 வாதி சொத்தில் குடியிருந்து வந்ததற்கான சொத்து வரி ரசீது என்றால் சரிதான். கூடுதல் எதிர்வழக்குரையில் வாதியின் தகப்பனார் கியைரம் பெற்ற நிலம் சர்வே எண்.240/2 ல்வருகிறது என 52 வருடங்கள் கழித்து கூறுவது இயலாது என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகள் 1922 முதல் 2001 வரை தாவா

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:25 +0530

சொத்தில் தொடர்ந்து அனுபவம் செய்து வந்ததற்கு கிரைய ஒத்தி அடமான ஆவணங்களும், பின்னிட்டு அதற்கு வரி செலுத்தி ரசீதுகள் தாக்கல் செய்தும், தங்கள் அனுபவத்தை நாளது தேதிவரை ஆவணங்கள் மூலம் உறுதி செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரை மூலமாக தாவா 2 வது இலக்க சொத்து பூஸ்தில் இருந்து வருகிறது என்பதை ஒப்புக்கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுஎன்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 ம்பிரதிவாதி வழக்கிற்கு அவசிய கட்சிக்காரர் என்றால் எனக்கு தெரியாது. அவர்தான் ஒப்பந்ததாரர் அதனால்தான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதுபோல் வேறு நபர்தான் ஒப்பந்ததாரர் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் வேறு நபர்தான் ஒப்பந்ததாரர் என்றால் வாதி வழக்குரையில் திருத்தம் செய்துகொள்ளலாம் என்றால் சரிதான். 2 ம்பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். அவரது எதிர்வழக்குரையில் இந்த வழக்கிற்கு நான் அவசியம் இல்லை என பின்னிட்டு வாதியை பலமணிநேரம் குறுக்கு விசாரணை செய்தததிலிருந்து அவர்தான் ஒப்பந்ததாரர் என ஒப்புகொண்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 ம்பிரதிவாதி எனது அனுமதியின்பேரில் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்ததால்தான் வாதியின் சகோதரரி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்றால் அத்துமீறி செல்லவில்லை நான் கொடுத்த உத்தரவின்பேரில் சென்றார். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்வரை நான் தாவா சொத்துக்களை அத்துமீறி நுழைந்து ரோடு போடுவது சம்பந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு கடந்த 26.12.2023 ம் தேதி அனுப்பப்பட்டுள்ளது அதனை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான் .வழக்கு நிலுவையில் இருக்கும்போது அரசு அதிகாரியான எனக்கு தீர்ப்புவரும்வரை காத்திருக்கவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். ஆனால் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே எனது அதிகார துஷ்புரியோகம் செய்து நீதிமன்றத்தை அவமதிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அது வா.சா.ஆ.20 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சி தலைவருக்கும் 26.12.2023 ம்தேதி வாதி தரப்பில் தாவா சொத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது அத்துமீறி நுழைந்தது சம்பந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த அறிவிப்பு நகல் என்னிடம் காட்டப்படுவது தான். மண்டபம் வி.ஏ.ஓ மற்றும் பேரூராட்சி தலைவர் வாதியின் சகோதரரியை கடுமையாக திட்டியுள்ளார் என்பதற்காக legal notice

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.01.27 18:13:35 +0530

அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். அது வா.சா.ஆ.21, 22 ஆகும். இந்த வழக்கில் வாதி தன்னுடைய அனுபவத்தை நிருபிப்பதற்கு அவர் தரப்பில் பல ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அடிப்படையில் வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. கிரைய பத்திரங்கள் வைத்திருந்தும் அந்த சொத்திற்கு முறையாக பட்டா பெறவில்லை என்றால் அந்த சொத்து பிற்காலத்தில் அரசு புறம்போக்கு, அனாதினமாக வகைப்பாடு செய்யப்படும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளின் முன்னோர்கள் பெயரில் பட்டா பத்திரங்கள் இருந்ததால்தான் அவர்கள் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசு புறம்போக்கு நிலமாக இருந்தால் பதிவு செய்யமுடியாது என்றால் சரிதான். 1996 தேதியிட்ட புலப்பட சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் மாரியம்மன்கோவில் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆணையர் வரைபடத்திலும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 1986 தேதியிட்ட புலப்படத்தில் மாரியம்மன்கோவில் இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வாதிகள் முன்னோர்கள் கிரையம் பெற்றபின்புதான் பின்னிட்டுதான் 1986 மாரியம்மன்கோவில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக கிராம புறங்களில் வேப்பமரத்தைான் மாரியம்மன்கோவிலாக வழிபடுவார்கள் என்றால் சரிதான். அதனால்தான் 1986 தேதியிட்ட புலப்படத்தில் மாரியம்மன்கோவில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் அனுபவத்தில் இருப்பதால்தான் தொடர்ந்து பட்டா பெறுவதற்கு பல மனுக்கள் அளித்தும், வருவாய் துறையில் பட்டா மநு நிலுவையில் இருப்பதை பயன்படுத்தி அத்துமீறி ரோடு போட முயன்றோம் என்றால் சரியல்ல. வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**2 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் உள்ளாட்சி துறையில் 24 வருடங்களாக பணியாறறி வருகிறேன். இந்த வழக்கு 08.07.2015 ம் தேதி தாக்கல் செய்யப்படும்போது நான் மண்டபம் பேருராட்சி செயல் அலுவலர் என்றால் சரிதான். 08.07.2015 ம் தேதி தாக்கல் செய்த வழக்கு சொத்து விபரத்தில் வழக்கு சொத்தான பேவர்பிளாக் சாலை மண்டபம் கிராம புல எண்.240/1 ல் அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.06.2016 ம் தேதி எதிர்வழக்குரையில் புல எண்.240/1 ல் எந்த

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:42 +0530

சாலையும் போடப்படவில்லை அந்த சாலை மண்டபம் கிராம அரசு புறம்போக்கு புல எண்.240/2 ல் அமைந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு பிற்பாடு 26.02.2021 ல் தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது தாவா சொத்து புல எண்.240/2 ல் அமைந்திருப்பதாக கண்டறிந்தபோது வாதி வழக்கிடை விண்ணப்பம் 1/2023 தாக்கல் செய்து அது உத்தரவாகி வழக்குரையில் புல எண்.240/2 என திருத்தம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 02.01.2024 தேதியில் கூடுதல் எதிர்வழக்குரை எனக்கு முன் இருந்த செயல் அலுவலர் தாக்கல் செய்து அதில் அரசு வழக்கறிஞர் மேலொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். புல எண்.240/2 ல் பேவர்பிளாக் சாலை அமைக்கும் தீர்மானம் மண்டபம் பேருராட்சி மன்றத்தில் 26.03.2015 ல் ஏகமனதாக போடப்பட்டது என்றால் சரிதான். அதை தொடர்ந்து 27.03.2015 ம் தேதியில் எங்களது பணியை நிறைவேற்றுவதற்கு எந்த ஒப்பந்ததாரருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது என்றால் மண்டபம் அூல் காஷன் மரைக்காயர் என்பவருக்கு ஒப்பந்த உத்தரவு அளிக்கப்பட்டது. இந்த தீர்மானம் மற்றும் ஒப்பந்ததாரர் நியமனம் செய்த உத்தரவுகள் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படுவது மண்டபத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.6 ஆகும். என்னிடம் காட்டப்படுவது பி.வா.சா.ஆ.6 ஆவணத்திலும் நான் போட்ட தனி உத்தரவு உள்ளது என்றால் சரிதான். ஒப்பந்த உத்தரவுப்படி உடனே சாலை அமைக்கும் பணி ஆரம்பித்து 2 வாரங்களில் முடிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்களில் தாவா புல எண்.240/2 தான் வண்டிப்பாதையும், வட்டக்கிணறு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.240/2 ல்தான் பேவர்பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளதாக வாதி தரப்பில் குறிபிடப்ப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேவிபரத்தைான் எதனை முதல் விசாரணையிலும், நிருபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். புல எண்.240/2 ல் மேற்கு எல்லையாக வாசுகிநாதன் என்பவரின் வீட்டிற்கு செல்லும் சந்துபாதை இருந்ததால் பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றும்போது "வாசுகிநாதன் வீட்டு சந்துபகுதியில் பேவர்பிளாக் சாலை அமைப்பது " என்று வாசகம் உள்ளது பஞ்சாயத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றால் சரிதான். வாசுகிநாதன் வீட்டிற்கு செல்லுமசந்தும, புல எண்.240/2 ம் மண்டபம் பேருராட்சி 15 வது வார்டில் தான் உள்ளது என்றால் சரிதான். வாசுகிநாதன் வீட்டிற்கு செல்லும் சந்து பாதை 70 அடி நீளமும், 4 முதல் 5 அடி அகலமும் உள்ளது என்றால் சரிதான். புல எண்.240/2 ஆனது 1947 க்கு முன்பு இராமநாத சமஸ்தான

Digitally signed by S ILAIYARAJA
S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:49 +0530

சொத்தாக இருந்து பிற்பாடு இந்திய அரசிற்கு 1950 ல் ஒப்படைக்கப்பட்டு பிறகு மாநிலங்களை வரையறை செய்தபோது தமிழ்நாடு அரசிற்கு சொந்தமானது என்றால் சரிதான். மண்டபத்தில் தாவா புல எண்.240/2 ன் வழியாக நான்கு பக்கங்களிலும் பொதுமக்கள் போக்குவரத்திற்காக அவர்களின் கோரிக்கையை ஏற்று தாவா சாலை எங்களால் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சாலை அமைக்க கட்டுமான பொருட்களை இறக்கி சாலை அமைத்துமுடிக்கும்வரை வாதி எந்தவித ஆட்சேபனையோ, ஆவணங்களோ எங்களிடம் தாக்கல் செய்யாமல் சாலை பணி முடிக்கப்பட்டு 2015 ஜுலையில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஒப்பந்தம் யாரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்றால் நான்தான். அந்த ஒப்பந்தம் சிவகங்கை பேருராட்சி மண்டல இயக்குநரின் அனுமதி கடிதம் பெற்று நிறைவேற்றப்பட்டது. அந்த அனுமதி கடிதம் பி.வா.சா.ஆ.6 ஆவணத்துடன் உள்ளது. சாலை அமைத்தற்குவா.சா.ஆ.20 ஆவணத்தில் ஆட்சேபனை அறிவிப்பை தன் வழக்கறிஞர் மூலம் வாதி எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். ஆனால் வழக்கு சொத்தான புல எண்.240/2 ல் பேரூராட்சி வாதியின் ஆட்சேபனையை மீறி சாலை அமைத்துள்ளதை நிரந்தரமாக அப்புறப்படுத்தவேண்டும் என்ற நிவாரணம் கோரி 08.07.2015 ல் இந்த வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு, அதன்பிறகு 8 ஆண்டுகள் கழித்து 26.12.2023 ல் வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**2 ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.01.27 18:13:55 +0530